# பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# வெற்றிடம்

## *பணிப்பாளர் நாயகம் (01)*

## *(இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் – SLIDA)*

*இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் (SLIDA) மேற்படிப் பதவிக்கான தகைமையுடைய உத்தியோத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

***<u>தகைமைகள் மற்றும் தேர்ச்சிகள்</u>***

- ***இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தான பட்டப்பின் பட்டத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துடைய உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் நிறைவேற்று / முகாமைத்துவ பதவிகளில் 20 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்துடைய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.***

***அல்லது,***

- ***இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு ஏற்புடையதாக பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.***

***அல்லது***

- ***இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ நிறைவேற்று மட்டத்துடைய உத்தியோகத்தராக இருபது (20) வருட அனுபவம் மற்றும் அதில் மூன்று (03) வருடங்கள் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருத்தல்.***

***அல்லது***

- ***இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்துடன் அரசின் அல்லது நியதிச் சட்ட சபையில் அல்லது நிறைவேற்று / முகாமைத்துவ பதவிகளில் 20 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM 2-1) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.***

- ***வயது 35 க்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.***

- ***சகல தரவுகளையும் உள்ளடக்கிய சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பப்படிவத்தை 2023 பெப்ரவரி மாதம் 17 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற*** *முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகப் பதவி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.*

***நீல் பண்டார ஹபுகின்ன***
*செயலாளர்*

*பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.*